**களுத்துறை பிரதேச சபை 2022**

-------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

களுத்துறை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் களுத்துறை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.**

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் அத்தியாய இலக்கம் 3.27 முதல் 3.32 வரை குறிப்பிடப்பட்ட பந்திகளுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் அத்தியாய இலக்கம் 6.1 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் இனங்காணப்பட வேண்டிய ரூபா 5,447,947 ஆன நூலகப் புத்தகங்கள் மீளாய்வாண்டின் போதும் இருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது இருப்பாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நூலகப் புத்தகங்கள் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் இனங்காணப்படல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் அல்லாத செலவினங்களுக்காக அரசாங்கத்தின் மூலதன மானியமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 89,974,532 | 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீண்டெழும் அல்லாத செலவினத்திற்கான அரசாங்கத்தின் மூலதன மானியம் சரியாக கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ரூபா 8,068,780 கிடைத்திருந்த போதிலும் அந்த மானியங்கள் சொத்து தொகுதியின் பிரகாரம் வகைப்படுத்தி இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சொத்தாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 600,000 ஆன நூலக புத்தகங்களைக் கொள்வனவு செய்தல் மீளாய்வாண்டின் நடைமுறைச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நூலகப் புத்தகளைக் கொள்வனவு செய்தல் சொத்தாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் மீதிக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிக்குமிடையே ரூபா 6,751,052 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் மீதிக்கும் உரிய பேரேட்டுக் கணக்குகளின் மீதிக்கும் இடையே ரூபா 932,336 வேறுபாடு காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 158(அ) பிரிவு | ஆதனவரி அறவிடலின் இறுதி படிமுறையாக ஆதனங்கள் தடைசெய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது சிவப்பு அறிவித்தல் விநியோகித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் திசெம்பர் 24 ஆம் திகதிய இலக்கம் 2155/8 என்ற வர்த்தமானிப் பத்திரத்தின் விதி இலக்கம் 42 | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஆதனங்களின் மெய்மையாய்வுக் காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள் ளதுடன் விரிவாக அதனைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்கான மனிதவள அபிவிருத்தி திட்டம் ஒன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் சரியாக நடவடிக்கை எடுக்கப்படும். | அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 50,962,414 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 62,107,295 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானமான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2021 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 9,483,183 | 9,479,741 | 8,537,184 | 12,208,751 | 11,011,441 | 9,472,825 | 5,615,244 | 11,266,194 |
| (ii) | வாடகை | 270,000 | 270,000 | 294,500 | - | 1,598,200 | 262,500 | 262,500 | 24,500 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 440,000 | 415,175 | 415,175 | - | 2,064,225 | 1,539,050 | 1,539,050 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 80,000,000 | 80,000,000 | 54,892,871 | 247,489,769 | 80,000,000 | 80,000,000 | 18,829,361 | 222,382,640 |
| | மொத்தம் | 90,193,183 | 90,164,916 | 64,139,730 | 259,698,520 | 94,673,866 | 91,274,375 | 26,246,155 | 233,673,334 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதன வரி காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 01-03 வருடங்களுக்கிடையிலான ஆதனவரி நிலுவை ரூபா 7,165,687 தொகையும், 03-05 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 2,304,691 தொகையும், 05-09 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 1,779,522 தொகையும் மற்றும் 09 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 539,425 தொகையும் காணப்பட்டது. | எதிர்காலத்தில் ஆதனங்களை தடைசெய்து நிலுவை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 60,000,000 ஆகவும், முத்திரைக் கட்டணம் ரூபா 197,404,504 ஆகவும் காணப்பட்டது. | 2019 ஆம் ஆண்டிற்குரிய தொகையில் ஒரு பகுதி கிடைத்துள்ளதுடன் 2020 ஆம் ஆண்டிற்குரிய பட்டோலை தயாரித்து மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்.**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| களஞ்சியத்தில் காணப்பட்ட பெறுமதி ரூபா 389,670 ஆன 27 இருப்பு விடயங்கள் 08 வருட காலத்திலிருந்து விளைவற்றுக் காணப்பட்டது. | கிருமிநாசினி திரவம் காலாவதியாகி இருந்ததுடன் ஏனைய துணைப்பாகங்களை ஈடுபடுத்தும் உபகரணங்கள் பாவனையில் காணப்படவில்லை. | களஞ்சிய மெய்மையாய்வு அறிக்கையின் பரிந்துரையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1946 இன் 57 ஆம் இலக்க பொது மயானம் மற்றும் தனியார் மயானங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் மயான நிலங்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு வேலி எல்லை அமைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான 17 மயான நிலங்களின் வேலி எல்லைகள் அமைக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் செலவின முகாமைத்துவம் காரணமாக வேலி எல்லையினை நிர்மாணிப்பதற்கு முடியாதிருந்தது. | மயான நில கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) வஸ்கடுவ பிரதேச சபை நிருவாகத்தின் கீழ் உள்ள 24 மயான நிலங்களில் 21 மயான நிலங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | மயான நிலங்களின் உரித்தை கையேற்பதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | மயான நிலங்களை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 2015 சனவரி 22 ஆம் திகதி மேல் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் வழங்கப்பட்டிருந்த டபள் கெப் வண்டி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைக்கு கெப் வண்டியை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | கெப் வண்டியை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உக்கல்பட கங்கந்தகொட சனசமூக நிலையக் கட்டிடத்தில் உள்ளக பிரித்தல் வேலையின் அலுமினியம் ஈடுபடுத்தி உள்ளக பிரித்தல்களை மேற்கொள்வதற்கு சதுர அடிக்கு உரிய அங்கீகாரிக்கப்பட்ட வீதம் ரூபா 1,435 ஆக இருந்த போதும் கொடுப்பனவு செய்யும் போது சதுர அடிக்கு ரூபா 4,561 ஆக ஆதாவது ஒரு சதுர அடிக்கு மேலதிகமாக ரூபா 3,126 வீதம் 164.34 சதுர அடிக்காக ரூபா 513,727 அதிகரித்து செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக்கொள்வதுடன் தற்போது மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது சரியான வீதத்தை உரித்தாக்கிக் கொள்ளல் வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மோட்டார் போக்குவரத்து ஆணையாளரிடமிருந்து வாகனங்களின் பதிவுச் சான்றிதழை இரத்துச் செய்யாமல் மீளாய்வாண்டில் 10 வாகனங்கள் ரூபா 1,077,973 இற்கு உடைந்த பகுதிகளாக விற்பனை செய்யப்பட்டிருந்தது. | பதிவினை இரத்துச் செய்ய வேண்டிய வாகனங்களுக்கான கோவைகள் களுத்துறை மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | பதிவுச் சான்றிதழை இரத்துச் செய்ததன் பின்னர் வாகனங்களை ஏலம் இடல் வேண்டும். |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபை அதிகாரப் பிரதேசத்தில் உக்கும் கழிவுகள் மெற்றிக் தொன் 206,628 மற்றும் உக்காத கழிவுகள் கிலோ கிராம் 155,340 சேகரிக்கப்பட்டிருந்தது. கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உக்கும் கழிவுகளுக்காக வீட்டு மட்டத்தில் கூட்டுப்பசளை பாத்திரங்கள் வழங்கும் நிலைபேறான அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | காணப்பட்ட தொற்றுநோய் நிலைமை மற்றும் அரசாங்கத்தின் சுற்றறிக்கையின் படி இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |